புதுக்கோட்டை மாவட்ட மருத்துவம், ஊரகநலப்பணிகள் மற்றும் குடும்பநல துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: மரு.அ.கோமதி, MBBS., DGO.,

செ.மு.ஆ.எண்.1512/அ1/2023 நாள்:04.12.2024

பொருள்: நிருவாகம் - புதுக்கோட்டை மாவட்ட குடும்பநலச் செயலகம் - திரு.பா.தெய்வநாதன், இளநிலை உதவியாளர் என்பவருக்கு பணிவரன்முறை ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1)சென்னை-08, செயலாளர், தமிழ்நாடு குடிமைப்பணிகள் தேர்வாணையம் அவர்களின் கடித ந.க.எண்.1960/PSD-D2/2023, நாள்:02.09.2023
2)இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள், கடித ந.க.எண்.56867/E2/2/2023, நாள்:21.09.2023
3)சென்னை-06, குடும்பநல இயக்குநரக பணிநியமன செயல்முறை ஆணை எண்.11285/குந/நி1/2023-6, நாள்:10.10.2023
4)திரு.பா.தெய்வநாதன், த/பெ.பாஸ்கரன், இளநிலை உதவியாளர் பணியில் இணைந்த நாள்:18.10.2023
5)மாவட்ட கல்வி அலுவலர், (இடைநிலை), அறந்தாங்கி அவர்களின் கடித ந.க.எண்.1320/ஆ3/2024, நாள்:18.06.2024
6)மாவட்ட கல்வி அலுவலர்(பொ.) தொடக்கக் கல்வி, அறந்தாங்கி அவர்களின் கடித ந.க.எண்.1650/ஆ3/2024, நாள்:13.08.2024
7)வட்டாட்சியர், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.ஆ2/4660/2024, நாள்:30.07.2024

-----

ஆணை:

புதுக்கோட்டை மாவட்ட குடும்பநலச் செயலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.பா.தெய்வநாதன் என்பவருக்கு நிலை 8 (19500-71900) என்ற ஊதிய விகிதத்தில் பார்வை 1 முதல் 4 வரை உள்ள ஆணைகளின்படி, தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு.பா.தெய்வநாதன், மாவட்ட குடும்பநலச் செயலகம், புதுக்கோட்டையில் இளநிலை உதவியாளராகப் 18.10.2023 அன்று முற்பகல் பணியில் இணைந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 5-இல் காணும் கடிதத்தின்படி தனியரின் 10ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ் உண்மைத் தன்மை வாய்ந்தது எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 7-இல் காணும் கடிதத்தின்படி தனியரின் சாதிச் சான்றிதழ் உண்மைத்தன்மை வாய்ந்தது எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளநிலை உதவியாளர் பதவியில் திரு.பா.தெய்வநாதன் என்பவரின் தற்காலிக பணியை அவர் அப்பதவியில் பணியேற்ற நாளான 18.10.2023 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர்(பணிநிபந்தனை) சட்டம் 2016-இன் பிரிவு 28-ன்கீழ் பணி வரன்முறைபடுத்தப்படுகிறது.

2….

Scanned with OKEN Scanner

திரு.பா.தெய்வநாதன் என்பவரின் தற்காலிக பணியை வரன்முறைப்படுத்தப்பட்ட 18.10.2023 அன்று முற்பகல் முதல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலம் தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலத்தில் இவர் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டும் எனவும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்.

தேவையான குறிப்புகள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

9/12/24

துணை இயக்குநர்,
மருத்துவம், ஊரகநலப்பணிகள் மற்றும்
குடும்பநலம், புதுக்கோட்டை

9/12/24

**பெறுநர்:**
திரு.பா.தெய்வநாதன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட குடும்பநலச் செயலகம்,
புதுக்கோட்டை

**நகல்:**
1)அ2 பிரிவு (உரிய வழியாக)
2)பணிப்பதிவேடு
3)உபரி-1

Scanned with OKEN Scanner